சுருக்கம்

வேளாண்மை-உழவர் நலன் - 2022-ம் ஆண்டிற்கான குறைந்தபட்ச ஆதார விலைத் திட்டத்தின் கீழ் கொப்பரை கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு (TANFED) அனுமதி அளித்து - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை

அரசாணை (2டி) எண்.127

நாள்: 29.07.2022.
திருவள்ளுவர் ஆண்டு 2053,
சுபகிருது-ஆடி 13-ஆம் நாள்

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.21, வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை, நாள் 21.01.2022.
2. அரசாணை (2டி) எண்.04, வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை, நாள் 25.01.2022.
3. அரசாணை (2டி) எண்.50, வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை, நாள் 12.04.2022.
4. அரசாணை (2டி) எண்.111, வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை, நாள் 23.06.2022.
5. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கடித எண்.3831/2022/CM1, நாள் 12.05.2022.
6. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்வணிகத் துறை இயக்குநரின் கடித எண்.விகுதி3/2346/2022, நாள்.14.06.2022.

******

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2022-ம் ஆண்டிற்கான குறைந்த பட்ச ஆதார விலையின் கீழ் ஜனவரி முதல் ஜூன் 2022 வரை கொப்பரை கொள்முதல் செய்வதற்கு ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி தமிழக அரசிதழ் எண்.60, நாள் 24.01.2022-ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், 2022ம் ஆண்டிற்கான 50,000 மெ.டன் அரவைக் கொப்பரை மற்றும் 1000 மெ.டன் பந்து கொப்பரை கொள்முதல் செய்வதற்கு மாநில அளவிலான ஆதரவாளராக தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தையும், முதன்மை கொள்முதல் முகமைகளாக 21 விற்பனைக் குழுக்களையும் மற்றும்

கொள்முதல் நிலையங்களாக 42 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களையும் நியமித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2022-ம் ஆண்டிற்கான குறைந்தபட்ச ஆதார விலைத் திட்டத்தின் கீழ் கொப்பரை கொள்முதல் செய்வதற்கு கோயம்புத்தூர் விற்பனைக் குழுவிற்கு நெகமம் மற்றும் செஞ்சேரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுடன் மேலும் கூடுதலாக பொள்ளாச்சி ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தினையும் கொப்பரை கொள்முதல் நிலையமாக நியமித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில், 2022-ம் ஆண்டிற்கான குறைந்தபட்ச ஆதார விலைத் திட்டத்தின் கீழ் கொப்பரை கொள்முதல் செய்வதற்கு கோயம்புத்தூர் விற்பனைக் குழுவிற்கு நெகமம், செஞ்சேரி மற்றும் பொள்ளாச்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுடன் மேலும், கூடுதலாக ஆனைமலை மற்றும் கிணத்துக்கடவு ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களையும் மற்றும் சிவகங்கை விற்பனைக் குழுவிற்கு சிங்கம்புணரி மற்றும் திருப்புவனம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுடன் மேலும், கூடுதலாக சிவகங்கை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தையும் கொப்பரை கொள்முதல் நிலையங்களாக நியமித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட கடிதத்தில், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் 2022-ம் ஆண்டிற்கான குறைந்தபட்ச ஆதார விலைத் திட்டத்தின் கீழ் பின்வரும் மையங்களில் கொப்பரை கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு (TANFED) அனுமதி அளிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

| வ. எண் | மாவட்டம் | கூட்டுறவு விற்பனை சங்கம் (CMS) | | கொள்முதல் நிலையம் (Procurement center) | அரவை கொப்பரை இலக்கு (மெ.டன்) |
|---|---|---|---|---|---|
| 1 | திருப்பூர் | உடுமலைப்பேட்டை | 1. | முடக்குப்பட்டி | 1000 |
| | | பல்லடம் | 2. | வாவிபாளையம் | 1000 |
| 2 | கோயம்புத்தூர் | சூலூர் | 3. | சூலூர் விற்பனைக் குழு | 1000 |
| | | பொள்ளாச்சி | 4. | பொள்ளாச்சி | 1000 |
| 3 | தஞ்சாவூர் | பட்டுக்கோட்டை | 5. | பேராவூரணி | 1000 |
| 4 | திண்டுக்கல் | கள்ளிமந்தையம் (முதன்மை வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்) (PACCS). | 6. | கள்ளிமந்தையம் (முதன்மை வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்). | 500 |
| | | பட்டிவீரன்பட்டி (முதன்மை | 7. | பட்டிவீரன்பட்டி (முதன்மை | 500 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்). | | வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்). | |
| | | மொத்தம் | | | 6000 |

6. மேலே ஆறில் படிக்கப்பட்ட கடிதத்தில், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர், மேலே ஒன்றிலிருந்து நான்கு வரை படிக்கப்பட்ட அரசாணைகளில் அனுமதி அளிக்கப்பட்டுள்ள 46 முதன்மை கொள்முதல் நிலையங்களைத் தவிர மற்ற மையங்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு அனுமதி வழங்க அரசு முடிவு செய்யலாம் எனவும், கொள்முதல் செய்யும் கால அளவு 31.07.2022 உடன் முடிவடையவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

7. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மற்றும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநரின் கருத்துருக்களை அரசு கவனமுடன் பரிசீலித்து 2022-ம் ஆண்டிற்கான குறைந்தபட்ச ஆதார விலைத் திட்டத்தின் கீழ் கொப்பரையை பின்வரும் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு (TANFED) அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

| வ. எண் | மாவட்டம் | கூட்டுறவு விற்பனை சங்கம் (CMS) | கொள்முதல் நிலையம் (Procurement center) | | அரவை கொப்பரை இலக்கு (மெடன்) |
|---|---|---|---|---|---|
| 1 | திருப்பூர் | பல்லடம் | 1. | வாவிபாளையம் | 1000 |
| 2 | கோயம்புத்தூர் | சூலூர் | 2. | சூலூர் (விற்பனைக் குழு) | 1000 |
| 3 | திண்டுக்கல் | கள்ளிமந்தையம் (முதன்மை வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்) (PACCS). | 3. | கள்ளிமந்தையம் (முதன்மை வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்). | 500 |
| | | பட்டிவீரன்பட்டி (முதன்மை வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்). | 4. | பட்டிவீரன்பட்டி (முதன்மை வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்). | 500 |
| | | மொத்தம் | | | 3000 |

(ஆளுநரின் ஆணைப்படி)

சி.சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், சென்னை-10.

(கு.பி.பா.)

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்,
சென்னை-28. (வழி: கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்)
இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை,
சென்னை-32.
இயக்குநர், வேளாண்மைத் துறை, சென்னை-5.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.
தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்,
சென்னை-32.
தலைமை பொறியாளர் (வேளாண்மை பொறியியல்), சென்னை.32.
முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர்
பாதுகாப்புத் துறை, சென்னை-9.
செயல் இயக்குநர், தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை,
சென்னை-32.
தேசிய வேளாண்மை விற்பனை கூட்டமைப்பு, சென்னை-84.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை-18.

நகல்:

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு
நேர்முக உதவியாளர், சென்னை- 9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் அவர்களின்
முதுநிலை தனிச் செயலாளர், வேளாண்மை-உழவர் நலத் துறை,
சென்னை - 9.
வேளாண்மை-உழவர் நலத் (அநமு3 ) துறை, சென்னை-9.
உதவி நிரலர், வேளாண்மை-உழவர் நலத்துறை, சென்னை–9.
சம்பந்தப்பட்ட கோப்பு எண்.13025/தோ.க.2/2022.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

03/08/2022
பிரிவு அலுவலர்